Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**நகரை மீண்டும் திறப்பதற்கும் மீட்டெடுப்பதற்குமான திட்டங்கள் பற்றிய சமுதாயத்தினரின் கருத்துக்களை நகர நிர்வாகம் நாடுகிறது**

ப்ராம்ப்ட்டன், ON (மே 12, 2020) – நகரை மீண்டும் திறப்பது மற்றும் மீட்டெடுப்பதற்கான நகர மேயர் அவர்களின் செயல் குழுவானது, சமுதாயத்தை ஈடுபடுத்துவதற்கான பணியை துவங்கிவிட்டது; இப்படி நகரைத் திறந்துவிடுவதில் பொதுமக்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்புத் தேவைகள் மற்றும் அதற்கான சேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யப்படும்

இதற்காக, குறிப்பிட்ட பயனாளிகள் கொண்ட குழுக்கள், வணிகர்கள் மற்றும் சமுதாயக் குழுக்களுடன் பலகட்ட ஆலோசனைகள் இடம் பெறும். மே 13 ஆம் தேதியன்று இப்படியான ஆலோசனைக் கூட்டமானது விளையாட்டுக்குழுக்களுடன் நடத்தப்படும்.

*மீண்டும் திறப்பது மற்றும் மீட்டெடுப்பு* ஆகியவை பற்றிய புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கருத்தாய்வில் பங்கேற்பதன் மூலம் ப்ராம்ப்ட்டன் சமுதாயத்தினரின் பின்னூட்டக் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன; கருத்தாய்வு இங்கே கிடைக்கப்பெறும்; இதை covid19reopencity@brampton.ca. எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொண்டும்செய்யலாம்.

பிராந்திய கவுன்சிலராகிய மார்ட்டின் மெடெய்ரோஸ் அவர்களால் வழிநடத்தப்பட்டு, மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசர கால மேலாண்மை அலுவலகத்துடன் இணைந்து, நகரின் வசதியமைப்புக் கட்டிடங்களை மீண்டும் பாதுகாப்பான மற்றும் படிப்படியான முறையில் மறுபடி திறப்பது பற்றி இந்தக் குழுவானது கவனம் செலுத்தும். படிப்படியாக பணிகளைத் திரும்பத் துவக்கும் போது, சிறப்பியல்பு கொண்ட கோவிட்-19 பணிப்படைகளுக்கு இந்தக் குழு அதற்கான செய்முறைகளைப் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்; இதனால் குடியிருப்புவாசிகள், வணிகர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தங்களுக்கு கிடைத்துவரும் ஆதரவினை தொடர்ந்து பெறுவார்கள்.

கோவிட் – 19 (COVID-19) தொற்றுப்பரவலை சமாளிப்பது பற்றிய தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/COVID19

**அறிஞர் கூற்றுக்கள்**

"நமது நகரத்தினை ஒருவழியாக திறப்பது மற்றும் மீட்டெடுப்பதற்கான திட்டங்கள் வகுப்பது என்பது, நம்முடன் கூட்டாக பணியாற்றுபவர்களுடன் நெருக்கமான கூட்டு வைப்பது, மற்றும் பிராந்திய மற்றும் பீல் ப்ப்ளிக் சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல் ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலை தடுப்பதில் சீரான ஒரு வேகத்தை கொண்டிருக்கின்ற வகையிலான ஒருங்கிணைந்த

பதில் செயலை நாம் நிலை நாட்ட வேண்டும் என்பதே நமது இலக்காகும். நமது சமுதாயத்தினரின் கடின உழைப்பிற்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்; நாங்கள் எங்களுக்கான பணியை ஆற்றுவதில் அவர்களின் தொடர்ந்த ஆதரவை வேண்டுகிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நமது நகரத்தினை மீண்டும் திறந்துவிடுவதற்கும், மீட்டெடுப்பதற்கான பாதுகாப்பான படிப்படியான திட்டங்கள் சிறப்பாகவே வகுக்கப்பட்டு வருகின்றன. இந்த செயல்முறையில் நாங்கள் முன்னேறிச் செல்வதற்கு, சமுதாயத்தினரின் தொடர்ந்த ஆதரவு மற்றும் பின்னூட்டக் கருத்துக்களையே நாங்கள் நம்பியிருக்கிறோம். நகரமைப்பில் பங்கு கொண்டிருப்பவர்களுடன் அர்த்தம் நிறைந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ள நான் காத்திருக்கிறேன்; இது நமது திட்டங்கள் உருப்பெறுவதில் உதவிகரமாக இருந்து, முழுமையான ஒரு அணுகுமுறைக்கு வழி வகுக்கும்."

- *மார்ட்டின் மெடெய்ரோஸ் , பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 3 & 4; தலைவர், நகரத்தை மீண்டும் திறப்பது மற்றும் மீட்டெடுப்பதற்கான மேயரின் பணிக்குழு*

"கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் ஆரம்பித்ததில் இருந்தே, தனது சேவை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு சேர்ப்பதில் நகர நிர்வாகம் குறிப்பிடத்தக்க வகையில் மாறிவிட்டது. நமது நகரத்தினை ஒருவழியாக திறப்பது மற்றும் மீட்டெடுப்பதை நோக்கி நாம் காத்திருக்கும் வேளையில், நமது கவனம் ஒன்றின் மீதே குறியாக இருக்கிறது- அதுதான் நமது சமுதாயத்தின் நல்வாழ்வு ஆகும். உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை முன்னுரிமை கொண்ட விஷயங்களாக கருதும் வேளையில், நகரின் குடியிருப்பு வாசிகள் மற்றும் நகரமைப்பு பணியில் பங்கு பெறுவோர் ஆகியோரின் தேவைகளை கவனமாக சம நிலைப்படுத்துவதும் நமது குறிக்கோளாகும்."

*டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca